**<u>தலைமை நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திருவாரூர்</u>**

<u>MCOP. No.36/2022</u>

RW : 1

2026 ஆம் ஆண்டு மே மாதம் 26 ம் தேதி ஆணையுறுதி சட்டம் 1969 பிரிவு 4 ன் படி திருமதி. Dr. R. லதா, M.A., M.L., Ph.D., தலைமை நீதித்துறை நடுவர், திருவாரூர் அவர்களால் ஆணையுறுதி செய்யப்பட்டது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | S. வித்யா | த / பெ. | : | திரு. சேகர் |
| கிராமம் | : | பந்தநல்லூர் | தாலுக்கா | : | திருவிடைமருதூர் |
| தொழில் | : | இளநிலை உதவியாளர் | வயது | : | 23 |

**<u>26.05.2026</u>**

**<u>முதல் விசாரணை</u>**

நான் இவ்வழக்கில் தரப்பினர் இல்லை. நீதிமன்றத்திலிருந்து அழைப்பாணை கிடைக்கப்பெற்றதின் பேரில் இன்று இவ்வழக்கில் முன்னிலையாகி எதிர்மனுதாரர் சாட்சி 1 ஆக சத்திய பிரமாணத்தின் பேரில் நான் அளிக்கும் முதல் விசாரணை வாக்குமூலம்.

நான் திருவாரூர் வட்டார போக்குவரத்து அலுவலகத்தில் இளநிலை உதவியாளராக பணிபுரிகிறேன். இவ்வழக்கில் சாட்சியமளிக்க எனக்கு அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. அந்த **அங்கீகாரம் கடிதம் சாட்சி சான்றாவணம் 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

நான் திருவாரூர் நகர காவல் நிலையத்தால் பதிவு செய்யப்பட்ட குற்ற எண்.1094/2021 வழக்கில் சம்பந்தப்பட்ட TN 50 H 1267 ன்ற பதிவெண் கொண்ட இருசக்கர வாகன **மோட்டார் வாகன ஆய்வாளர் அறிக்கையின் சான்று நகல் கொண்டு வந்துள்ளேன் அது சாட்சி சான்றாவணம் 2 ஆக குறியீடு செய்யப்படுகிறது**.

அந்த சாட்சி சான்றாவணம் 2 ல் காலம் 7 ல் ஓட்டுநர் விவரத்தில் முருகானந்தம், த/பெ, ராமதாஸ், எண்.47, மேட்டுபாளையம் திருவாரூர் என குறிப்பிடப்பட்டுள்ளது. காலம் 8 ல் DL not produce, CR issued என குறிப்பிடப்பட்டுள்ளது. ஓட்டுநர் உரிமம் ஒருவருக்கு இல்லை என்றாலோ, ஆய்வின் போது சமர்பிக்கவில்லை என்றாலோ காலம் 8 ல் DL not produce என்று தான் கொடுக்கப்படும்.

ஓட்டுநரின் முகவரி எங்கள் வட்டார போக்குவரத்து அலுவலகத்திற்கு உட்பட்ட முகவரியில் உள்ளது. 2019 பிறகு வழங்கப்படும் ஓட்டுநர் உரிமம் கணினியில் வழங்கப்படும். ஆய்வறிக்கையில் குறிப்பிட்டுள்ள ஓட்டுநர் உரிமம் பெறவேண்டும். அதனை திருவாரூர் வட்டார போக்குவரத்து அலுவலகத்தின் தான் பெறவேண்டும்.

**குறுக்குவிசாரணை ஒத்திவைக்கப்படுகிறது**.

சாட்சி கூறியதை என்னால் திறந்த நீதிமன்றத்தில் பதிவு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

LATHA Digitally signed by LATHA Date: 2026.05.26 16:04:26 +0530

தலைமை நீதித்துறை நடுவர்,

திருவாரூர்

தலைமை நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திருவாரூர்

MCOP. No.36/2022

RW : 2

2026 ஆம் ஆண்டு மே மாதம் 26 ம் தேதி ஆணையுறுதி சட்டம் 1969 பிரிவு 4 ன் படி திருமதி. Dr. R. லதா, M.A., M.L., Ph.D., தலைமை நீதித்துறை நடுவர், திருவாரூர் அவர்களால் ஆணையுறுதி செய்யப்பட்டது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | திரு. R. அருண்குமார் | த / பெ. | : | திரு. ராமமூர்த்தி |
| கிராமம் | : | திருவாரூர் | தாலுக்கா | : | திருவாரூர் |
| தொழில் | : | முதுநிலை மருத்துவர் | வயது | : | 39 |

**26.05.2026**

**முதல் விசாரணை**

நான் இவ்வழக்கில் தரப்பினர் இல்லை. நீதிமன்றத்திலிருந்து அழைப்பாணை கிடைக்கப்பெற்றதின் பேரில் இன்று இவ்வழக்கில் முன்னிலையாகி எதிர்மனுதாரர் சாட்சி 2 ஆக சத்திய பிரமாணத்தின் பேரில் நான் அளிக்கும் முதல் விசாரணை வாக்குமூலம்.

நான் திருவாரூர் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் முதுநிலை மருத்துவராக பணிபுரிகிறேன். கடந்த 13.11.2021 ந் தேதி மதியம் 12.15 மணிக்கு நான் பணியில் இருந்தபோது 40 வயது, முருகானந்தம் என்பவரை மருத்துவ சிகிச்சைக்காக 108 ஆம்புலன்ஸ் மூலம் அழைத்து வந்தனர். அவர்களை விசாரித்த போது மேற்கண்ட நபர் சாலையில் காயம்பட்டு கிடந்ததாக 108 ஆம்புலன்ஸில் அழைத்து வந்தவர்கள் என்னிடம் கூறினர். நான் அவரை பரிசோதித்த போது அவர் மதுபோதையில் சுயநினைவின்றி காணப்பட்டார். எனவே விபத்து பற்றி எந்த விவரமும் என்னால் சேகரிக்க முடியவில்லை.

அவருக்கு வலது மேல் உதட்டில் 2X1X0.5CM கிழிந்த காயம் காணப்பட்டது. அவருடைய இரத்த அழுத்தங்கள் சாதாரணமாக காணப்பட்டது. நான் அவருக்கு முதலுதவி செய்து மேல் சிசிக்சைக்காக உள்நோயாளியாக

அனுமதித்து விபத்து பதிவேடு பதிவு செய்தேன். என்னிடம் காட்டப்படும் ம.சா.ஆ.2 விபத்து பதிவேடு என்னால் பதிவு செய்யப்பட்டது.

**குறுக்குவிசாரணை ஒத்திவைக்கப்படுகிறது**.

சாட்சி கூறியதை என்னால் திறந்த நீதிமன்றத்தில் பதிவு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

LATHA
Digitally signed by LATHA
Date: 2026.05.26 16:04:35 +0530

தலைமை நீதித்துறை நடுவர்,

திருவாரூர்